# ஐந்திணை ஐம்பதில் அறிவியல் சிந்தனைகள்

**முனைவர் ச. வனிதா**

**உதவிப்பேராசிரியர் , தமிழ்த்துறை,**

**தருமபுரம் ஞானம்பிகை அரசு மகளிர் கல்லூரி,**

**மயிலாடுதுறை 609001**

**e.mail id vanithamuthu008@gmail.com**

**8**

**ஆய்வுச்சுருக்கம்**

மக்கள் வாழ்வியல் பயன்பாட்டில் அறிவியலின் நுகர்வு என்பது அடிநாதமாகிப் போனது. காலை எழுந்தது முதல் இரவு தூங்கச் செல்லும் வரையில் அறிவியலின் செயல்பாடு இல்லாமல் இயங்காது என்ற நிலை உருவாகி விட்டது. அறிவியல் துறைக்குப் பல்வேறு ஆக்கச் சொற்கள் என்பதை அந்த அந்த மொழிகளில் உள்ள இலக்கியங்களிலிருந்து தேடத் தொடங்கிவிட்டனர். அப்படி தேடும்போது அந்த இலக்கியத்தில் அறிவியல் சிந்தனைகளை வெளிப்படுத்தி இலக்கிய ஆக்கம் உருவாக்கப்பட்டுள்ளனவா என்ற கேள்விக்கு விடையந்தான் ஐந்திணை ஐம்பதில் அறிவியல் சிந்தனைகள் என்ற இந்த ஆய்வுக் கட்டுரையின் வரைவாக்கம். நீண்ட நெடிய தமிழ்இலக்கியப் பரப்பில் பதினெண் கீழ்க்கணக்கில் ஒன்றான அக இலக்கியம் ஐந்திணை ஐம்பது ஆகும். இதில் மழைக்கால நிகழ்வைக் கண்டறிதல், மேகம் இடி, மின்னல், ஆகியவற்றின் நிறங்கள், மழை எப்படி உருவாகிறது என்ற அறிவியல் பூர்வமான கருத்து, மேற்கில் சூரியன் மறையும் போது ஏன் வானம் சிப்பாகக் காட்சியளிக்கிறது. பருவநிலை மாற்றங்களின் நிகழ்வுகள் போன்ற அறிவியல் சிந்தனைகளை வெளிப்படுத்துவதே இந்த ஆய்வுக் கட்டுரையின் நோக்கமாகும்.

**திறவுச் சொற்கள்**

மழை – செவ்வானம் – கார் – மின்னும்வேல் – மஞ்ஞை – மின்னல் – முழக்கும் இடி – முல்லை முகை – வளி – வானம்- பிணங்குதல் – சொக்கர் வானம் – பைங்கொடி -இழிதல் – அருவி – சேயரிக்கண்

**முன்னுரை**

பதினெண் கீழ்க்ணக்கு நூல்களில் அக இலக்கியங்களான ஐந்திணை ஐம்பது, ஐந்திணை எழுபது, திணைமொழி ஐம்பது, திணைமாலை நூற்றைம்பது என்பன அமைந்துள்ளன. இவை யாவும் அகவிலக்கியச் சிறப்புகளைத் தன்னகத்தே கொண்டாலும் அறிவியல் செய்திகளையும் உள்ளார்ந்த நிலையில் வெளிப்படுத்தவும் முனைந்துள்ளன. நேரடியான அறிவியல் நெறிகள் சொல்லப்படாமல் அதற்குரிய துணைக் களன்களாக இருந்து அறிவியல் சிந்தனைகளை மலரச் செய்துள்ளன என்பதற்கு ஐந்திணை ஐம்பது இலக்கியம் மற்ற இலக்கியங்களை விட கூடுதலாக எண்ணியுள்ளது.

மழைவரும் அறிகுறிகள், பிரிவால் ஏற்படும் உடல் மாற்றம், மழையோடு பின்தொடரும் இடி, மின்னல், வானவில் போன்ற செய்திகள், மழை எவ்வாறு பொழிகின்றது என்பதற்கான விளக்கங்கள், சூரியன் மேற்கில் மறையும்போது ஏற்படும் வானத்தின் நிறம், தாவரங்கள் வறண்ட காலங்களில் காய்ந்தும் மழைக் காலங்களில் தவிர்ப்பதுமான பருவ நிலை மாற்றம். கார்ப் பருவத்தை அறிந்து கொள்ளும் அறிகுறிகள், காட்டுப் பகுதிகளில் தேர் ஓட்டிச் செல்ல முடியும் என்ற சாலை பற்றிய மண் அறிவியல், அருவி நீராடினால் துன்பம் போகும் நிலை என்ற மனோ தத்துவ அறிவியல் நீர் நிலையில் அதிக நேரம் நீராடினால் கண்கள் சிவக்கும் என்ற மெய்ப்பாட்டு நிகழ்வு அறிவியல் போன்ற எண்ணற்ற அறிவியல் சிந்தனைகள் அமைந்துள்ளன. எனவே அவற்றை இலக்கிய ஆக்க நிலையில் இந்த நூலை யாத்த மாறன் பொறையனார் எங்ஙனம் வெளிப்படுத்தியுள்ளார் என்பதை நோக்கமாகக் கொண்டு இக்கட்டுரையாக்கம் உருவாக்கப்பட்டுள்ளது.

**மழைவரும் நிகழ்வை அறிதல்**

இன்றைக்கு அறிவியல் வளர்த்துள்ள தன்மையால் வானொலி, தொலைக்காட்சி, இணையம் போன்றவற்றால் துள்ளியமாக மழைவரும் அறிகுறியை வானொலி அறிக்கையாக வெளிப்படுத்தி மழைத் தகவலை அறிவிக்கின்றனர். அறிவியல் என்னவென்றே தெரியாத அற இலக்கியக்காலத்தில் மழையின் வருகையையும் அதன் வெளிப்பாடுகளையும் புலவர்கள் உணர்ந்து வாழ்வியலோடு தந்துள்ளனர்.

முல்லை நில நிகழ்வில் தலைவன் கார்காலம் வருவதற்குள் வந்துவிடுவேன் என்று பிரிந்து சென்ற நிலையில் அவன் வருவது உறுதி அது வரையில் ஆற்றிருக்குமாறு அவளின் தோழி உரைத்த செய்தியில் வானத்தின் கறுப்புநிறம் கண்ணபிரானின் திருமேனி போலவும் மின்னல்கள் குமரக் கடவுளின் வேல் போல மின்னி முப்புரத்தை எரித்த சிவபெருமானின் கொன்றை மாலை போல ஒத்துக் குலுங்க நிகழும் கார்காலம் வலம் சுழித்து வந்துவிட்டது என்னும் குறிப்பு மழையின் தோற்றம் உருக்கொள்வது வெண்ணிறமான மேகங்கள் குளிர்ந்தால் கறுநிறமாக மாறும் மேகங்கள் ஒன்றோடு ஒன்று மோதும் போது ஏற்படும் இடி, மின்னல் இவை எந்த நிறத்தில் இருக்கும் என்பதையும் கூறியவர் இறுதியில் சிவபெருமான் இரும்பு, பொன், வெள்ளி ஆகிய மதில்களை அழித்ததுபோல் இடியும் மின்னலும் மழையுடன் வந்து விட்டது என்று குறிப்பிட்டுள்ள செய்தியால் மழைக்காலத்தின் நிகழ்வையும் அதன் நிறம், வெளிப்படும் சத்தம், நிறம் என்பனவற்றையும் அறிவியல் சிந்தனைகளாக உள்ளன. இதனை,

**“மல்லர்க் கடந்தான் நிறம்போல் திரண்டெழுந்து**
**செல்வக் கடம்பமர்ந்தான் வேல்மின்னி – நல்லாய்**
**இயங்கெயில் எய்தவன் தார்ப்பூப்ப ஈதோ**
**மயங்கி வலனேரும் கார்”** (ஐந்திணைஐம்பது பா.எண் -1)

என்பதால் அறியமுடிகிறது.

மழையின் அறிகுறியை மயில் அகவி வெளிப்படுத்தும் மயிலின் அகவுதல் சத்தம் மேகத்தின் இடிமுழக்கம் போல இருந்தது என்று இடிமுழக்கத்தின் சத்தத்தை மயில் அகவுதலோடு கூறிய நிகழ்வும் அறிவியல் ஒலியமைப்பு சார்ந்தது.

**“அணி நிற மஞ்ஞை அகவ இரங்கி**

**மணி நிற மாமலைமேல் தாழ்ந்து”** (ஐந்திணைஐம்பது பா.எண்-2)

என்ற அடிகளால் உணரலாம்.

ஒரு பகுதியில் இடியுடன் மின்னல் ஒளியுடன் மழைபெய்தால் அவ்வாறே பல பகுதிகளிலும் பெய்யும் என்ற அறிவியல் செய்தியாக தோழி தலைவியிடம் நம் தலைவர் சென்றுள்ள நாட்டிலும் இவ்வாறு மழைக்காலமாக இருக்கும் அதை உணர்ந்து விரைவாக வந்துவிடுவார் என்னும் குறிப்பமைய மழை அறிவிப்பு செய்யும் அறிவியல் உத்தி தோழியிடம் அமைந்ததைக் காணலாம்.

**“மின்னும் முழக்கும் இடியு மற்றின்ன**

**கொலைப் படைசாலப் பரப்பிய – முல்லை**

**முகைவென்ற பல்லினாய்! இல்லையோ – மற்று**

**நமர் சென்ற நாட்டுள் இக் கார்”** (ஐந்திணை ஐம்பது பா.எண் -3)

மழை நிலப்பகுதியில் உள்ள நீர் நிலைகள் சூரிய வெப்பத்தால் ஆவியாகி மேகங்கள் உருவாகிப் பின்னர் காற்றின் குளிர்ந்த தன்மையால் மீண்டும் மழையாக நிலத்திற்கே தரும் அறிவியல் உத்தியை அப்படியே இலக்கியம் ஆக்கித் தந்துள்ள புலவனின் அறிவியல் மதி போற்றத்தக்கது. இதனை,

**“கோடுயர் தோற்றம் மலைமேல் இருங்கொண்முக்**

**கூடி நிரந்து தலை பிணங்கி – ஓடி**

**வளி கலந்து வந்துறைக்கும் வானங் காண் – தேறும்**

**துளி கலந்து வீழ் தரும் கண்”** (ஐந்திணை ஐம்பது பா. எண் – 5)

என்பதால் அறிய முடிகின்றது.

வானத்தின் நிற மாற்றச்செய்தி

வானம் எப்போதும் நீல நிறமாகக் காட்சியளிக்கும் சில நேரம் மேற்கே சூரியன் மறையும் நிலையில் சூரியனின் வெப்பக் கதிர்களால் செவ்வானமாக மாறும் காட்சியையும் ஐந்திணை ஐம்பது இலக்கியம் சுட்டியுள்ளது.

**“தேரோன் மலை மறைந்த செக்கர் கொள்புன் மாலை”** (ஐந்திணை ஐம்பது பா.எண் -7)

என்ற தொடரால் உய்த்துணர முடிகின்றது.

**தாவரவியல் செய்தி**

தாவரங்கள் வறண்ட காலங்களில் இலைகளை உதிர்த்துவிடும். மீண்டும் வசந்த காலம். வரும்போது புதிய தளிர்கள் துளிர்க்கும். இது தாவரங்களுக்குரிய செயல்பாடு. இந்த நிகழ்வையும்

ஐந்திணை ஆசிரியர் அழகாக மொழிந்துள்ளார். எப்படி என்றால் தலைவன் பிரிந்து சென்றதால் தலைவிக்கு ஏற்பட்ட பசலைநோய் அவனைக் கண்ட உடனேயே நீங்கிவிடும். அவ்வாறே தாவரங்கள் மழையில்லாமல் காய்ந்துவிடும். மழைத்துளி பட்டவுடன் புதிய தளிர்களைத் துளிர்க்கச் செய்யும்.

**"பிரிந்தவர் மேனிபோல் புலலென்ற வள்ளி**

**பொருந்தினர் மேனி போல் பொற்பத் – திருந்திழாய்**

**வானம் பொழியவும் வாரார் கொல் இன்னாத**

**கானம் கடந்து சென்றார்"** (ஐந்திணை ஐம்பது பா.எண் -8)

என்பதால் தாவரங்களின் தன்னைமயாக்கத்தையே பருவநிலை மாற்ற நிகழ்வுகளோடு இடம் பெற்றுள்ள இப்பாடல் தாவரவியல் அறிவியலை அறிய வைத்துள்ளது. வாடிய கொடிகள் மழையின் வரவால் துளிர்த்துள்ளமை எண்ணத்தக்கது. மழைக்காலத்தின் வரவை அறிந்துகொள்ள முல்லை. மிக முக்கியமான நிகழ்வாக இடம் பெற்றுள்ளது. மழைக்காலத்தில் மேகங்கள் இடி முழக்கத்துடன் பெய்யும் போது முல்லைக் கொடிகள் அதிர்ந்து நிறைய முல்லைப் பூக்களைப் பூக்கும் என்ற தாவரவியல் செய்தியும் அறியத்தக்கது. இதனை,

**"பைங் கொடி முல்லை அவிழ் அரும்பு ஈன்றன**

**வம்பு மழையுறக் கேட்டு" (ஐந்திணை ஐம்பது பா.எண் – 9)**

என்பதால் அறிலாம்.

**அருவி நீரில் குளித்தால் ஏற்படும் நன்மை**

அருவி நீரில் பொதுவாகக் குளித்தால் மனத் துன்பங்கள் போகும். பைத்தியமும் தெளியும் என்பதால் அத்தகைய மனநோய் உள்ளவர்களை அருவிக்கு அழைத்துச் சென்று குளிக்க வைப்பதும் குற்றாலம், பாபனாசம் போன்ற அருவிகளில் குளிக்க வைக்கும் மரபும் தமிழர்களிடம் இருந்து வருகின்றது. ஆனால் பொதுவாக கண் சம்பந்தமான நோய்கள் நீங்கவும் மனநோய் நீங்கவும் அருவியல் குளிப்பர். இவ்வாறான நோயளிகளைத் தவிர மற்றையோர் ஒரு மகிழ்விற்காக அருவி நீராடுவர் என்பதும் இன்பம் கிடைக்கும் என்பதும் மகிழ்ச்சியாய் இருக்கலாம் என்பதும் பொதுவான கருத்துகளாகியுள்ளன. இந்த இலக்கியத்தைப் பொருத்த அளவில் தலைவி உரைக்கும் கூற்றில் நம் தலைவன் நாட்டிலிருந்து வீழும் அருவியில் நீராடினால் தலைவனைத் தழுவாமையால் உண்டான துன்பம் நீங்கிவிடும் என்கின்றாள்.

**"………………………… நானம்**

**கலந்திழியும் நன்மலை மேல் வாலருவியாடப்**

**புலம்பும் அகன்ற நில்லா"** (ஐந்திணை ஐம்பது பா.எண் – 13)

என்பதால் இதனை அறிய முடிகிறது. அருவிநீரில் நீராடினால் இன்பம் கிட்டும். ஆனால் நீரில் அதிக நேரம் குளித்தால் கண்கள் சிவந்து விடும் என்ற மருத்துவ அறிவியலையும் பேசியுள்ளார் மாறன் பொறையனார்.

மலையின் அருகில் உள்ள வேங்கை மரத்தில் மலர்களைக் கொய்ததால் மாந்தளிர் போலும் எம் உடல்

வியர்த்தது. வியர்வையை அடக்க அங்குள்ள அருவிகள் புகுந்து விளையாடினோம். நீண்டநேரம் குளித்ததால் தலைவியின் கண்கள் சிவப்பாகிவிட்டன என்று தோழி வெளிப்படுத்தும் பாடல் எண்ணத்தக்கது.

**“மாந்தளிர்மேனி வியர்ப்ப மற்று – ஆங்கெனைத்தும்**

**பாய்ந்தருவி ஆடினேம் ஆகப் பணி மொழிக்குச்**

**சேர்ந்தனவாம் சேயரிக்கண் தாம்”** (ஐந்திணை ஐம்பது பா.எண்-15)

என்பதால் அறிய முடிகின்றது.

**தொகுப்புரை**

அறிவியலுக்குத் துணை நல்கும் இலக்கியச் சான்றாதாரங்கள் வரிசையில் பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் அமைந்த பாடல்கள் சில அறிவியல் சிந்தனைகளை உள்ளீடாகப் பெற்றுள்ளது. மழையின் அறிகுறி. மழையின் நிகழ்வு, மின்னல் ஒளி, இடியோசை என்பனவற்றையும் அறிவியலாக இதன் ஆசிரியர் மாறன் பொறையனார் வெளிப்படுத்தியுள்ளார். பிரிவால் வாழும் தலைவிக்கு ஏற்பட்ட பசலை நோயின் நிறம் பீர்க்கம்பூ நிறமாக உள்ளதையும் உவமையால் காட்டியுள்ளார். மழை எவ்வாறு உருவாகிறது என்பதையும் அது மீண்டும் எவ்வாறு பூமிக்கு வருகிறது. என்பதையும் அழகான வார்த்தைகள் வழி விளக்கியள்ளார். சூரியன் மேற்கே மறையும் போது சில நாட்கள் வானம் சிவப்பாக மாறும் பருவநிலைமாற்றத்தையும் தாவரங்கள் எவ்வாறு பருவ நிலைக்குத்தக்கவாறு மாற்றிக் கொள்கின்றன என்பதையும் வெளிப்படுத்தியுள்ள அறிவியல் சிந்தனை எண்ணத்தக்கது. அருவி நீரில் குளித்தால் துன்பம், நோய் அகன்று இன்பம் பெறலாம் என்ற மருத்துவ அறிவியலையும் தெரிவித்துள்ள கருத்துகள் எண்ணத்தக்கவையாகும்.

**துணைநூற்பட்டியல்**


1. இராமசுப்பிரமணியம் வ.த (உரை) பதினெண் கீழ்க்கணக்கு “ஐந்திணை ஐம்பது தொகுதி -2 , செல்லப்பா பதிப்பகம் மதுரை ,முதற்பதிப்பு - 2009